DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 42/2021

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | தேவநாதன் |
| Father / Husband Name | பாலசுப்புரமணியன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 07.10.2024

**குறுக்கு விசாரணை**

1. எதிரியும் நானும் நெல் வியாபாரம் செய்து வந்ததால் பழக்கமானோம். எனக்கு காவாத்தூர் கிராமம். எதிரிக்கு ஓரத்தி வடமணிப்பாக்கம் கிராமம். காவாத்தூருக்கும் வடமணிப்பாக்கத்திற்கும் சுமார் 40 km தூரம். நான் காவாத்தூரில் பயிர் செய்து வருகிறேன். எதிரி எங்கள் ஊருக்கு நெல் வாங்க வரும்போது 2018 ம் வருடத்தில் இருந்து பழக்கம் ஆனார். 2018 முதல் 2021 ஆம் வருடம் வரை எதிரியுடன் எவ்வாறு வியாபாரம் நடந்தது என்றால் எதிரி என்னிடம் ரூபாய் 10 லட்சம் மதிப்பான நெல் வாங்கினார். அதற்கு ரூபாய் 4 லட்சம் மட்டும் கொடுத்துள்ளார். மேற்படி பாக்கி ரூபாய் 6 லட்சம் தான் வழக்கில் கொடுக்க வேண்டிய தொகை என்று மேற்படி விவரத்தை குறிப்பிட்டு எனது புகாரில் மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் ரூபாய் 6 லட்சம் தரவேண்டும் என்று மட்டும் சொல்லியுள்ளேன் வேறு விவரங்கள் சொல்லவில்லை. எதிரியுடன் எனக்கு 2018 ம் வருடத்தில் இருந்து பழக்கம் ஏற்பட்டது என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

2. நான் 10 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்து வருகிறேன். தோராயமாக 500 மூட்டைகள் எதிரிக்கு கொடுத்திருக்கிறேன். எப்போது பயிர் போடப்பட்டது என்றால் 2018 ம் வருடம் 4 வது மாதத்தில் போடப்பட்டது. BPT நெல் 1 மூட்டை ரூபாய் 1220 மதிப்புள்ளது பயிர்செய்தேன். 500 மூட்டைகளுக்கு ரூபாய் 12 லட்சம் மதிப்புள்ளது. எதிரி என்னிடம் பகுதித் தொகைகளாக வங்கி மூலம் 2018 ம் வருடம் 5 மாதத்திற்கு பிறகு பணம் பரிமாற்றம் செய்தார். மொத்தமாக ரூபாய் 4 லட்சம் தான் கொடுத்தார். மேற்படி தொகையை 2019 ம் வருடம் கொடுத்தார். நான் பாக்கி தொகையை எப்போது எதிரியிடம் கேட்டேன் என்றால் 12.11.2019 ம் தேதி பணத்தை கேட்டேன் எதிரி என்னிடம் மொத்தமாக 10 காசோலையை கொடுத்துள்ளார். 10 காசோலைகளையும் 2019 ம் வருடம் கொடுத்தார். மேற்படி 10 காசோலைகளில் ஒன்று தான் இந்த வழக்கு காசோலை என்றால் சரிதான்.

3. மேற்படி 10 காசோலைகளில் 5 காசோலைகள் வங்கியில் திருப்பப்பட்டது. மேற்படி விவரத்தை புகாரிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடம் கொடுக்கவேண்டிய தொகை அனைத்தும் கொடுத்துவிட்டார் என்றாலும் அவரது காசோலையை பயன்படுத்தி தவறாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து பணம் பறிக்கும் நோக்கத்தில் பொய்யான சங்கதியை கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**